**செய்தி வெளியீடு எண்:354** **நாள்: 06.06.2017**

## செய்தி வெளியீடு

சவூதி அரேபியாவிலுள்ள ஒரு முன்னணி மருத்துவமனைக்கு GNM தேர்ச்சியுடன் மகப்பேறு (OBG), **தீவிர சிகிச்சைப்பிரிவு** (ICU), **அவசர சிகிச்சை** (Emergency), **அறுவை சிகிச்சைப்பிரிவு** (Operation Theatre) மற்றும் மருத்துவம் அறுவைச்சிகிச்சைப் பிரிவுகளில் இரண்டு வருட பணி அனுபவம் பெற்ற **பெண் செவிலியர்கள்**, டிப்ளமோ தேர்ச்சியுடன் இரண்டு வருட பணி அனுபவம் பெற்ற பெண் **மருத்துவப்பதிவு டெக்னிசியன்கள்** (Medical Record Technician), ஆண்/பெண் **X-RAY டெக்னிசியன்கள்** (X-RAY TECHNCIANS), ஆண்/பெண் **ஆய்வக டெக்னிசியன்கள்** (Lab Technicians) போன்றவர்களுக்கான நேர்முகத் தேர்வு நடைபெற உள்ளது.

தேர்ந்தெடுக்கப்படும் செவிலியர்கள், எக்ஸரே டெக்னிசியன்கள், ஆய்வக டெக்னிசியன்களுக்கு குறைந்தபட்சம் ரூ.45,000/– மற்றும் மருத்துவ பதிவு டெக்னிசியன்களுக்கு ரூ.48000/– மாத ஊதியத்துடன் சவூதி அரேபிய அரசின் சட்டதிட்டத்திற்குட்பட்ட இதர சலுகைகளும் வழங்ப்படும்.

மேற்குறிப்பிட்ட பணியிடங்களுக்கு தகுதியுள்ளவர்கள் சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் கல்வி, அனுபவம், பாஸ்போர்ட் ஆகியவற்றின் நகல்கள், வெள்ளை நிறப்பிண்ணணியில் எடுக்கப்பட்ட மூன்று புகைப்படம் மற்றும் ஒரிஜினல் பாஸ்போர்ட் ஆகியவற்றுடன் 7.6.2017 மற்றும் 8.6.2017 ஆகிய ஏதாவது ஒரு நாளில், எர்ணாகுளம், குண்டநூர் சந்திப்பு, NH47 பைபாஸ்ஸில் அமைந்துள்ள கிரௌன் பிளாசா ஓட்டலில் (CROWNE PLAZA HOTEL) காலை 9.00 மணி முதல் நடைபெறும் நேர்முகத்தேர்விற்கு நேரில் வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விரிவான தகவல்களுக்கு www.omcmanpower.com என்ற இந்நிறுவன வலைதளத்திலோ அல்லது 044–22505886/22502267/22500417/8220634389 ஆகிய தொலைபேசி எண்கள் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

‘

**நிர்வாக இயக்குநர்**

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**